நாமார்க்கும் குடியல்லோம்! நமனை யஞ்சோம்!!

ஸ்ரீ

லண்டன்மா நகரில் காந்தி திருவாசகம்

1. முன்னுரை

கண்ணபிரானும் கந்தக்கடவுளும் கண்கண்ட தெய்வங்கள் என்பர் பெரியோர். அவ்விரு கடவுளரின் சாயலாக விளங்குகின்றார் காந்தியடிகள். அவரைக் கண்கொண்டு காண, அவனியில் உள்ளார் அனைவரும் ஆவல் கொண்டுளர்; பாருலகின் பற்பல பாகங்களும் அவரைப் பரிந்தழைக்கின்றன. பெரியார் பலரும் அவரது போதங் கேட்டுப் பரமானந்தம் எய்துகின்றனர். தோலும் எலும்புமாகத் துலங்கும் அத்தூயார் மானிடகோடிகளை, உயிர்த்தொகுதிகளை, ஒப்ப நோக்குகின்றார்; ஒன்னலரின் உள்ளத்தையும் கவர்கின்றார்; உள்ளங்கவர் கள்வனாக உரை பகர்கின்றார். முன்னாளிலே உலகனைத்தையும் ஒரு குடைக்கீழ் ஒரு சிலர் ஆண்டதாக நமது நூல்கள் கூறும். இஃது கவியின் மனக்கோட்டை, வர்ணனையின் [illegible], கருத்தின் உயர்ச்சி என்பர் பலரும். இன்று மகாத்மா காந்தியோ மாநிலம் அனைத்தையும் ஒரு குடைக்கீழ் ஆளுகின்றார் அன்றோ? அப்பெருமான் ஏந்தியுள்ள குடையோ அன்பின் வடிவம்; விரித்துள்ள விதானமோ கர்மத்தின் அம்சம்; தாங்கிநிற்கும் தண்டமோ தண்ணளியின் நிலயம். ஆதலின் அவர், ஒருவனாய் உலகேத்த நிற்கின்றார்; தனக்குவமை இல்லாத தயாபரனாய்த் துலங்குகின்றார்; தாரணியனைத்தையும் நன்னெறிப்படுத்த அவர் தருணம் பார்த்

திருக்கின்றார். இத்தகைய பெரும்புருஷனைப் பெற்றெடுத்த பாக்கியம் நமது பாரதபூமிக்கே உரியதாகும். என்னே! இந்தியாவின் இணையிலாப் பெருமை!

தர்மம் குன்றி, அதர்மம் ஓங்குகையில், ஆண்டவன் அவதரிப்பான் என்பது எம்மதத்துக்கும் சம்மதமானது. மானிடவர்க்கமோ இச்சமயம் ஆணவம், காமம், மாயை எனும் கடுஞ்சுழலில் சிக்கி, கானக விலங்கேபோல் கொள்ளையிலும் கொலையிலும் இறங்கிக் கொக்கரிக்கின்றது; கோரமான கோலாகலமும் கொள்கின்றது. காத்தல் கடவுளின் அவதாரமான கண்ணபிரானே அத்தகைய வர்க்கத்தை அறவேயழித்து அறத்தை நிலைநாட்டினன்; சக்தி, சிவம் இரண்டின் அம்சமான கந்தமூர்த்தியோ அவ்வர்க்கத்தினை வேரறுத்து வீறுகொண்டான். நமது காந்தியோ அன்பு உரைகூறி, அறவழியேகாட்டி, அருள்வலைவீசி அனைவரையும் அமரர்போலாக்க அரும்பாடு படுகின்றார். ஈயையும் எறும்பையும்கூட அவர் நோகப் பண்ணார்; எதினும் ஈசுவர சொரூபத்தையே காண்பார்; யாருக்கும் ஏற்றமே தேடித்தர இச்சை கொள்வார். தமர் என்றும் பிறர் என்றும் அவர் பாரார். எனினும் பாரத புத்திர புத்திரிகளிடம் அவருக்குப் பிரியம் அதிகம். ஏழை பங்காளன், தீனதயாளன், அனாதரட்சகன் என்று ஆண்டவனுக்குப் பல நாமங்கள் உண்டு. அங்ஙனமே காந்தியடிகளும். ஆதலினால்தான், நம்மவரிடம் அவர் பேரன்பு கொண்டிருக்கின்றார்; நம்மவருக்காக இன்னல் பல அடைகின்றார். நம்மவருக்கு நலமளிக்கும் மூலமாக நானிலத்து மக்களையும் நல்வழிப்படுதலே அவரது நாட்டம். இந் நோக்கினைக் கொண்டே, அவர் இங்கிலாந்துக்குத் தூதுபோக நேர்ந்தது. பஞ்சபாண்டவருக்காக அன்று துவாரகாபுரிவாசன் தூதுசென்றான் என்றால், இன்றோ பஞ்சையான பாரதருக்காகவே மகாத்மா காந்தி கப்பலேறித் தூதுபோயிருக்கிறார். அங்கே அவர் அருளியுள்ள வாக்கனைத்தும் "ராஜீய திருவாசகம்" ஆகும். அத் திருவாசகத்தினை அடுத்த அத்தியாயங்களில் அன்பர்கள் பார்க்கலாம். இணையிலா அம் மணிவாசகம் மக்களின் சிந்தைக்கும் செவிக்கும் இனிய உணவாகும்

2. அவன் செயல் 3492

பாரனைத்தும் பொய்யெனவே கருதித் துறந்தோர் பலராவர். அன்னவரில் தலைசிறந்தவர் பட்டினத்தார். உடை கோவணமும் உடன்வராது என்று அவர் உதறித் தள்ளினர். அவரும், "எல்லாம் அவன்செயல், என் செயலால் ஆவது யாதொன்றும் இல்லை," என்று சொல்லியுள்ளார். முற்றத்துறந்த மெய்ஞ்ஞானியரின் கொள்கை அஃதே. முப்பத்து முக்கோடி மக்களின் ஏகநாயகனும், ஒப்பற்ற தூதுவனுமாக விளங்கும் புருஷன் காந்தியடிகளேயாம். அப்பெரியார் லண்டன்மாநகர் செல்லக் கப்பல் ஏறுகையில் கூறிய வாசகங்கள் இவை:—

"அகிலம் வல்ல ஆண்டவனே என் துணைவன்; எனக்கு வழிகாட்டியும் அவனே. அவனன்றி ஓரணுவும் அசையாது. என்னால் ஆவது ஒன்றும் இல்லை, எல்லாம் நின் செயலே என்று நாம் அவன் முன்னே வெறுங்கையுடன் நிற்றல்வேண்டும். அங்ஙனமாயின், உலகனைத்தையும் நாம் எதிர்த்து நிற்க இயலும்; தவிர நமக்கு யாதோர் ஊறும் நேராது. ராஜீய வானமோ இருண்டு கிடக்கின்றது. யான் வெறுங்கையுடன் திரும்பிவருமாறு நேரக்கூடும். எனினும் ஆண்டவனது அருளினலேயே நான் லண்டன் செல்வதால், அவனருளையே நம்பிக் கிடக்கின்றேன்."

நான், எனது என்று தருக்கி நிற்போர் பலர்; எல்லாம் தம்மாலேயே நடக்கின்றது என்று அன்னர் சாதிப்பர். ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே எனும் திருவாக்கினை அன்னவர் நன்கு அறியார். ஆதிநாளில் பாண்டவருக்கும் துரியோதனுதியருக்கும் இடையே எழுந்த சண்டை பாரதப்போர் எனப்படும். அப்போர் பதினெட்டு நாள் வரை நடவாநின்றது. ஒருதினம், துரோணர், கிருபர், பார்த்தன், பீமன் முதலிய வீரபுருஷர், நான்ஜெயித்தேன், நான் ஜெயித்தேன், என்று கூறித் தருக்குமிகக் கொண்டனர். தொண்டைவரையில் இருகூறுகக் கிழியுண்டு, அப்போரை நோக்கிக்கிடந்த அராவான் என்பான், "பேதைகாள்! தற்பெருமை ஏன்? சக்கரம் அறுக்கின்றது, கபாலம் ஏந்துகின்றது. உங்களால் ஆவது யாது?", என்றுரைத்தனன்.

உடனே அனைவரும் அறிவுதலைப்பட்டு அடங்கலாயினர். எல்லாம் அவன்செயல் என்று எண்ணி நிற்பதே காந்தியின் பெருங்குணம். உப்புச்சண்டைக்குப் புறப்பட்டகாலையிலும், "முன்னவனே முன்னின்று நடத்துகின்றான்," என்று சொல்லிக்கொண்டே அவர் வழி நடந்தார்.

இனி, ஆங்கில மக்களோ மகா ராஜதந்திரிகள். அத்தந்திரங்கொண்டே அகிலமெங்கும் ஆண்மை செலுத்த அவர்கள் முயலுகின்றார்கள். சாணக்கியன் மீண்டும் பிறவி கொண்டுவரின், அவனையும் ஒருகை பார்க்க ஆங்கில ராஜதந்திரியர் பின்வாங்கார். தேன்சொட்டப் பேசிப் பலரையும் மயக்கவல்ல அத் தந்திரிகளுடன் வாதம்புரியும் வகை துறைகளை ஆலோசனை செய்தீர்களா என்று ஒருவர் காந்தியைக் கேட்டார். அப்போது அப் புண்ணியபுருஷன், "அவர்களின் முன்னே இன்னது பேசுவது என்று முன்னதாக நான் ஆலோசனை செய்யவில்லை; அவர்களை நேருக்குநேரே கண்டதும், எல்லாம் என்மனதில் உதிக்கும். எல்லாம் வல்ல ஈசன் உளான்", என்றே இசைத்துள்ளார்.

3 காங்கிரஸ் கொடி

ஏடன் என்பது ஒரு துறைமுக நகரம். பம்பாய்க்கும் அதற்கும் கப்பல்மூலம் நான்குநாள் பயணம். லண்டன் செல்லும் கப்பல்கள் ஏடன் நகரில் சற்றே தங்கும். மகாத்மா காந்தியை ஏடன் நகரின்வாசிகள் வரவேற்று, காணிக்கையும் செலுத்தினர். அப்போது நம் காங்கிரஸ் கொடியை உயர்த்த அந் நகர மக்கள் கருதினார்கள். அதிகாரிகளோ அதற்குச் சம்மதிக்கவில்லை. அது விஷயம் காந்தி மகானுக்கு எட்டியது. அப்பால் அக் கொடியை உயர்த்த ஏடன் நகர அதிகாரிகள் உத்தரவு தந்தனர். பின்னர் அந்நகர மக்களுக்கு அவர் நல்லுபதேசம் புரிந்தார். அது சமயம் காங்கிரஸ் கொடியைக் குறித்து அவர் கூறியதின் சாரம் இது:—

"காங்கிரஸ் கொடியே தேசீயக்கொடியாம். அதனைக் காக்கவேண்டி, இந்தியரில் அநேகர் ஆருயிர் துறந்தனர். மேலும் அக் கொடியின் கண்ணியத்தினை நிலைநாட்ட எண்ணிய பலரோ திரமுடன் போலீஸ் தடியடியையும்

ஏற்று நின்றனர். இந்தியர் கூடும் கூட்டத்தில், காங்கிரஸ் கொடியை உயர்த்தாமல் இருக்க ஒண்ணுமோ? காங்கிரஸ் மகாசபையின் பிரதிநிதியை அழைத்திருக்கையிலும் அக்கொடியை உயர்த்தாதிருக்க இயலாது. தேசிய சம்பந்தமான கூட்டங்கள் கூடும்போதெல்லாம், காங்கிரஸ் கொடியை உயர்த்தவேண்டும்; அதற்கு மதிப்புக் காட்டலும் வேண்டும். ஆங்கிலக்கொடி "யூனியன் ஜாக்" எங்கும் பறக்கின்றது. காங்கிரஸ் கொடியும் அந்தரமளாவப் பறத்தல்வேண்டும். காங்கிரஸ் மகாசபைக்கும் அரசாங்கத்துக்கும் சமரஸம் இருக்கும் சமயம், காங்கிரஸ் கொடியை உயர்த்துவதில், அதிகாரிகளுக்கு ஆட்சேபம் இருக்கலாமோ? அதற்கு ஆதரவன்றோ தரல்வேண்டும்."

உலகசாந்தி:—உலகிலே சாந்தி நிலை நிற்கவேண்டும் என்று பலரும் பேசுகின்றனர். எல்லாம் ஏட்டளவிலும் வாயளவிலுமே; சிந்தையிலும் செயலிலும் ஒன்றும் இல்லை. சாந்தி தேவை எனும் மேனாட்டினரோ தம் படை வலிமையைப் பலவழியிலும் பெருக்கிக்கொண்டே போகின்றனர். இந்நிலையில் யுகப்பிரளயம்போன்ற யுத்தம் விரைவில் கிளம்பும் என்று மதியூகிகள் எச்சரிக்கை செய்து வருகிறார்கள். அந்த எச்சரிக்கை அம்பலம் ஏறவில்லை. உலகிலே சாந்தி நிலவவேண்டின், இந்தியாவில் திருப்தி தோன்றவேண்டும். ஏடன் நகரில் இது சம்பந்தமாய் நமது காந்தியடிகள் திருவாய்மலர்ந்தது இது:—

"இந்தியாவின் தற்கால நிலையோ உலகசாந்திக்கு ஓர் ஆபத்தாகும். இந்தியா மிகவும் மகத்துவம் வாய்ந்த தேசம். சுதந்திரம் எய்த அது முனைந்து நிற்கின்றது. அம்முயற்சியில் அஹிம்ஸையே அதன் அரிய ஆயுதம். இந்தியமக்கள் திருப்திகொண்டு வாழ வகையிருப்பின், உலகசாந்திக்கு அது உதவிபுரியும். இன்று இந்தியா தேசம் சுதந்திரம் இல்லாமல் தத்தளிக்கின்றது. உலகின் வல்லரசுகள் எல்லாம் இந்தியாவைக் கட்டியாள ஆவல்கொண்டு கிடக்கின்றன. ஆங்கிலேயரோ அதன் நலபலத்தை ஏகபோகமாக ஆண்டு அனுபவிக்கின்றனர். அஹிம்ஸை முறையைக் கையாண்டு இந்தியா சுதந்திரம்

பெறின், உலகசாந்திக்கே அது வழிகாட்டும். ஹிந்துக்களும் முகம்மதியரும் ஒருமனம் கொள்ளாதிருத்தல் மானக்கேடாம். இஸ்லாம் மதமோ ஏற்றமுள்ள மார்க்கமாம். உலகெங்கும் அது பரவியுள்ளது. நபிகள் நாயகமான முகம்மதோ சாந்தாவதாரம். எனவே, ஹிந்துவின் மீது வெறுப்புக்கொள்ளுதல் முகமதியருக்குப் பெருமையன்று. முகம்மதியரின்மீது வெறுப்புக் கொள்ளுதல் ஹிந்துக்களுக்கும் பெருமை ஆகாது. மீண்டும் உரைப்பேன்; இந்தியா மிக்க மகத்துவம் பொருந்தியது. ஒருவரைக்கண்டு மற்றவர் அஞ்சுவதேன்? சுயராஜ்யம் என்றால் என்ன? இந்தியர் அனைவரும் ஒருமனங்கொண்டு ஒத்து வாழ்வதன்றோ? இந்தியரான அனைவருக்கும் பரிபூரண சுதந்திரம் வேண்டும் என்றே காங்கிரஸ் மகாசபை பாடுபடுகின்றது. ஹிந்துமதம் கோழைமக்களின் மதம் அன்று; இஸ்லாமிய சமயமும் எளியோரின் மார்க்கம் அல்ல. வலிமிகப்படைத்த இருவகை மக்களும் கௌரவமான பான்மையில் உழைக்க முயலின், ஒருவருக்கொருவர் அச்சங்கொள்ளவோ ஐயங்கொள்ளவோ இடம் ஏது?"

4. தாயகத்தின் பெருமை

எகிப்து தேசத்திலே போர்ட்சேட் எனும் துறைமுக நகரம் உள்ளது. அங்கே நம்மவர் பலர் இருக்கின்றனர். அன்னார் காந்தியடிகளுக்கு நல்வரவு கூறினர். அதற்கு அடிகள் கூறிய பதில் இது:—"சோதரர்களே! உங்கள் அன்பும் காணிக்கையும் கண்டு களித்தேன்; வந்தனமும் செய்கின்றேன். அன்னிய நாட்டில் தங்கி நீங்கள் வாழ்ந்து வருகிறீர்கள். இங்கே நம் தாயகத்தின் பெருமையைப் பாதுகாத்தல் உங்கள் கடமையாகும். உங்களுக்கு வாழ்வளிக்கும் நாட்டினுக்கு நீங்கள் ஊழியம் புரிதல்வேண்டும். உங்கள் நடையும் நொடியும் உயர்வுக்கு உரியதாக இருத்தல் அவசியம். இந்தியாவிலே பசிப்பிணியால் வாடும் கோடிக் கணக்கான மக்களை நீங்கள் மறத்தல் கூடாது."

சத்தியமே ஜயம்:—எகிப்து தேசத்தின் தலைநகர் கெய்ரோ எனப்படும். அந்நகரிலே அல்அஹ்ரம் எனும் பத்திரிகை பிரசுரமாகிறது. அதன் ஆசிரியரிடம் காந்தி

மகான் சொன்னது யாதெனில்:—"வட்டமேஜை மகாநாட்டினுல் பலன் இல்லை என்று ஏற்பட்டுவிடின், சட்ட மறுப்பு இயக்கத்தில் இறங்குவதைத் தவிர வேறு வழியில்லை. அதனுல் முன்னைய வருஷத்திலும் மிக அதிகமான கஷ்டத்திற்கும் தியாகத்திற்கும் இந்தியா ஆளாக வேண்டும். எத்தகைய கஷ்டநஷ்டம் நேர்ந்தபோதிலும் சரி, சுதந்திரப்போரை நெடுகநடத்த காங்கிரஸ் மகாசபை தயாராக இருக்கிறது. இனி, எகிப்தியரோ இந்தியரைப் போல் மிகவும் புராதனமான மேன்மக்கள். கண்மூடித் தனமாய் மேனுட்டினரை எகிப்தியர் பின்பற்றக்கூடாது. ராஜியப் போராட்டத்தில் அஹிம்ஸை முறையைக் கையாண்டு, சத்தியத்தை நம்பி நடந்தால், எகிப்திய தேசியவாதிகள் விரைவிலே பெருவெற்றி பெறுவார்கள். அஹிம்ஸை முறையிலும் சத்திய நம்பிக்கையிலும் இந்தியா வெற்றிபெறுமாயின், பொதுவாக உலகனைத்திலுக்கும், சிறப்பாக கிழக்குதேசங்களுக்கும் நல்வழி பிறக்கும்."

கனவும் நனவும்:—பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த மார்ஸேல்ஸ் எனும் நகரில் காந்தி கூறியது ஈதாகும்:—"என் தேசம் சுதந்திரம் எய்தல்வேண்டும் என்பதே எனது வாழ்வில் நான் கொண்டுள்ள கனவாகும். அக்கனவு நனவு ஆகும் எனும் கருத்துடன் நான் இங்கிலாந்து செல்கின்றேன். இங்கிலாந்திலே தொழிலரசு மாறி, புதியதோர் அரசு ஏற்படினும், எனது கொள்கை மாருது"

தலைக்குமேல் போராட்டம்:—காந்திமகான் லண்டன் மா நகரை நெருங்கியதும், "ராய்ட்டர்" பிரதிநிதியிடம் சொல்லியது:— "இங்கிலாந்தின் செல்வ நெருக்கடியோ யாவரையும் திடுக்கிடச் செய்யும். அத்தகைய விஷயத்தை எங்ஙனம் சமாளிப்பது என்றே பிரிட்டிஷ் அரசாங்தார் கவலைகொண்டு கிடக்கின்றனர். இந்நிலையில் இந்தியாவின் தேவையை, உரிமையை, அன்னர் அசட்டைசெய்யார். செய்யின், இந்தியாவிலே சட்டமறுப்பும் பகிஷ்கார இயக்கமும் மீண்டும் கிளம்பும். சாந்திக்கும் சமரசத்திற்கும் உரிய மார்க்கங்கள் அனைத்திலும் நான் முனைந்து முயன்று பார்ப்பேன்; வேறு வழியில்லை என்று தோன்றினுல்தான் மீண்டும் போராட்டத்தில் இறங்குவேன்."

கணக்கு வழக்கு:—மகாத்மா காந்திக்கு லண்டன்மா நகரிலே அன்பர் பலர் கூடி உபசாரம் புரிந்தனர். அவ்வேளை அவர் பேசியதின் சாரம்:— “ வாயில்லாப் பூச்சிகளாய், வயிறு காயும் ஏழைகளாய் உள்ளவர்களுக்கே நான் பிரதிநிதி. அன்னார் நன்கு உண்ணவும், உடுக்கவும் இருக்கவும் வசதி பெறல்வேண்டும். இஃதே காங்கிரஸ் மகாசபையின் நோக்கம். இதற்கு சுதந்திரம் மிக அவசியம். சமரஸமும் சாந்தியும் நிலைபெறவேண்டும் எனும் கருத்துடன் நான் இங்கு வந்துள்ளேன். காங்கிரஸ் மகாசபையின் கட்சியை எடுத்துரைப்பதே எனது கடமை; சத்தியம், அஹிம்ஸை இரண்டையும் கடைப்பிடித்து, சுதந்திரம் அடையவேண்டும் என்பதே காங்கிரஸின் கோட்பாடு. ஹிம்சை மார்க்கம் பலன் தராது. ஆங்கில நண்பர்காள்! நீங்கள் அனைவரும் தற்சமயம் உங்கள் தேசத்தின் செல்வநிலையைக் குறித்து சிந்தனையில் ஆழ்ந்து கிடக்கின்றீர்கள். தற்சமயம் உங்கள் தேசத்தின் செலவுக்கு ஏற்ற வருவாய் இலது; செல்வ நிலையோ மிகச் சிக்கலாக இருக்கின்றது. ஆதலின், இந்தியாவின்விஷயத்தைக் கவனிக்க உங்களுக்கு அவகாசம் இராது. எனினும், இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் உள்ள ராஜீயக் கணக்கு வழக்கு சரிவர தீர்ந்தாலன்றி, உங்கள் தேசத்தின் வரவு செலவும் கணக்கு வழக்கும் சமன் ஆகா. இதனை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். நான் வந்திருக்கும் காரியம் சமரஸமாகத்தீர்ந்தால், இந்தியாவுக்கு மட்டுமே நன்மை உண்டு என்று எண்ணுகிறீர்கள்; உலகனைத்திற்குமே நலம் உண்டு என்பதை எண்ணிப் பாருங்கள். சிறிதும் கலப்பில்லாத அப்பட்டமான சுதந்திரமே இந்தியாவுக்கு மிகவும் தேவை. சாந்தியும் சமரஸமும் அவசியமே ஆயினும் கௌரவத்தைப் பறிகொடுக்கும்படியான சாந்தியில் எனக்கு நம்பிக்கை இல்லை. கௌரவத்தை நிலைநாட்டுவதற்கு உரிய சாந்தியில்தான் எனக்கு நம்பிக்கை உண்டு.” உயிர் பெரிது தான்; உயிரினும் சிறந்தது மானமே. ஆதலின், மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே என்று போதித்துள்ளார் ஒரு பெரியார்; மானங் குன்றின் மனம் குன்றும், ஆன்மாவும் ஓட்டம் பிடிக்கும்.

5. வாள் முனையா?

வட்டமேஜை மகாநாட்டிலே மகாத்மா காந்தி பேசியது:— "பிரிட்டிஷ் பிரஜையாக இருப்பதில் ஒரு பெருமை உண்டு என்று முன்னம் நான் எண்ணியிருந்தேன். அந்த எண்ணம் மலையேறிப் போய்விட்டது. இன்றோ, கலகக்காரனாக நிற்கின்றேன். எனினும், பங்காளி அல்லது கூட்டாளி எனும் முறையில் சாம்ராஜ்யத்தின் ஓர் அங்கத்தினனாக இருக்க விரும்புவேன். வலுக்கட்டாயத்தின் மேல் பங்காளியாக இருத்தல் என்பது இயலாது. பங்காளித்தனத்தில் பலன் இன்றேல், பிரிந்துபோக இடம் வேண்டும். இந்தியாவும் இங்கிலாந்தும் பங்காளியாக இருக்கவேண்டுமானால், இந்தியாவுக்குப் பரிபூர்ணமான சுதந்திரம் வேண்டும்; அத்தகைய சுதந்திரம் கிட்டினால்தான், பங்காளித்தனம் கௌரவமாக இருக்கும். காங்கிரஸ் மகாசபையின் கருத்து இஃதேயாம். இதனை மிக அடக்கமுடன் ஆனால் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறவே நான் இங்கு வந்துள்ளேன். சாரம் இல்லாமல், சக்கைபோன்ற அரசியலைக்கண்டு காங்கிரஸ் மகாசபை திருப்தி கொள்ளாது. கௌரவமும் சமத்துவமும் பொருந்திய பங்காளித்தனம் உளது எனும் நம்பிக்கையுடன் ஊர்செல்ல எனக்கு ஆசை உளது; இந்த ஆசை கைகூடுமாக."

"வாள்முனையின் வலிகொண்டு இந்தியாவைக் கட்டியாள இங்கிலாந்துக்குப் படைவலி உளது. இதனால் இங்கிலாந்துக்கு நலம் கிட்டுமோ? அன்புநார் கொண்டு, இந்தியாவைப் பிணித்தாலன்றோ இங்கிலாந்து நலம்பெறலாம். அடிமை வாழ்வில் அகப்பட்டுக் கொந்தளிப்பும் கலகமும் கொண்டுள்ள இந்தியா ஆபத்துக்கு இடமாகும். சரிசமமான பங்காளி ஆயின், இந்தியாவினால் உலகனைத்தினுக்குமே நலம் உண்டாகும். என்தேசம் சுதந்திரமுடன் வாழ விரும்புவதுபோல் பிறதேசங்களும் வாழவேண்டும் என்பதே என் கருத்து. ஏழை மக்களான தொழிலாளருக்கும் உழவருக்கும் நலம் தேடித்தரவே காங்கிரஸ் சபை இருக்கின்றது. அந்த ஏழைகளின் நலத்தைப் பெருக்குதலினும் பெரிய கடமை எனக்கு வேறில்லை."

மனக்கருத்து யாது? :—வட்டமேஜை மகாநாட்டிலே மகாத்மா பேசியதில் மற்றோர் அம்சம்:—"இங்கே பல பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அவர்கள் தேச மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை; அரசாங்கத்திறால் பொறுக்கி எடுக்கப்பட்டவர்களே. இது கண்டு என் மனம் நிம்மதி கொள்ளவில்லை. தவிர, இச்சபையில் இருக்கவேண்டிய மக்களில் சிலர் அழைக்கப்படவில்லை. இனி, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மனக்கருத்து யாது? அதனை அறிவிக்காமல், வினை பேசிக் கொண்டிருப்பதில் யாது பயன்? அரசாங்கத்தின் கருத்தை அறிந்தால், அது எங்களுக்கு ஏற்கும் ஏற்காது என்று நாங்கள் சொல்லமுடியும். கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல், தர்க்கம் புரிதல் வினை."

"ஐரோப்பியருக்கு ஒரு வார்த்தை. இந்திய மகா ஜனங்களின்நலத்தில்அன்னவர் சிரத்தைகொள்ள வேண்டும். அங்ஙனம் சிரத்தை கொள்ளின், ஐரோப்பியருக்குத் தனி பிரதிநிதித்துவம் தேவையாகாது; இந்திய மக்களின் பிரதிநிதிகளாக அவர்கள் துலங்கலாம். ஐரோப்பியர் இந்தியாவிலே இந்தியர்போல் வாழ்தல் வேண்டும். யாருக்கும் தனியான பிரதிநிதித்துவம் கூடாது. இதுவே காங்கிரஸ் மகா சபையின் கட்சி. அன்னிய ஆட்சியிலே ஐரோப்பியருக்கு அபாரமான சலுகை இருந்தது. அன்னார் இனிமேல் தங்கள் நலமும் தேசமக்களின் நலமும் ஒன்றே என்று கருதி நடத்தல்வேண்டும். சபைக்குரிய அங்கத்தினரை அரசாங்கம் நியமித்தல் கூடவே கூடாது."

நாளைக் கடத்தின் :—இங்கிலாந்திலே தொழிலரசு மறைந்து, கன்ஸர்வேடிவ் கட்சியின் ஆதிக்கம் ஏற்பட்டுளது. இந்நிலை ஏற்படுவதற்குச் சிலதினங்கள் முன்பாக, மகாத்மா மொழிந்தது. "புதிய மந்திரிமார் எத்தகைய மனப்பான்மை கொள்வர் என்று தெரியவேண்டும். இந்தியாவின் விஷயத்தில் சிரத்தை காட்டாமல், அவர்கள் நாளைக் கடத்திக்கொண்டேபோனால், நான் திரும்பிவிடுவேன். இங்கிலாந்திலே செல்வ நெருக்கடி ஏற்பட்டுளது. அந்நெருக்கடி தீருவதற்கு இந்தியாவுடன் சமரஸம் அவசியமாகாது என்று பிரிட்டிஷ் மந்திரிமார் நினைப்பின்

அனர்த்தம் விளையும். மகாநாடு முறிந்துவிடின், இந்தியாவின் நிலைமை என்னுகுமோ? ஆண்டவனே அறிவான்! கஷ்ட நஷ்டம் எனும் கனல்வெள்ளத்தில் இந்தியா குதிக்க நேரும். சுதந்திரம் கிட்டும்வரையில், இந்தியர் சமாதானம் கொள்ளார்; சோம்பியும் கிடவார், வீரதீரங்காட்டிச் சமரே செய்வர். இது நிச்சயம்."

6. கடைசிவரையில் போரே

பார்லிமெண்டு சபை மெம்பர்களின் கூட்டத்தில் காந்தி பேசியது:—"தோழர்காள்! இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்குவதாயின், பாதுகாப்பான முறைகள் செய்து கொள்ளவேண்டும் என்கின்றனர். சிலர் பாதுகாப்புக்கள் யாருக்கு? யாருடைய நலத்துக்கு? இந்தியாவின் வருமானத்திலே 100-க்கு 80 பங்கை ஆங்கிலேயர் தங்கள் அதிகாரத்துக்குள் வைத்துக்கொண்டு, பாக்கியுள்ள 20 பங்கைக்கொண்டு எங்கள் தேசப்படிப்பு, சுகாதாரம், ரஸ்தா இவைகளைப் பார்த்துக்கொள்ள வேண்டுமாம். இத்தகைய நிலை சுதந்திரம் ஆகுமா? இதனை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். சுயமதிப்புள்ள எந்த இந்தியனும் ஒப்புக் கொள்ளான். சட்டமறுப்பில் இறங்கி, எனது இரத்த வலிகொண்டு, நான் போர் புரிவேன்; அதுபற்றி உங்களால் சிறையிடப்படவும் தயாராக இருப்பேன்; போலிஸ் தடியடியும் வாங்கிக்கொள்ளப் பின்வாங்கமாட்டேன். அடிமையாக இருந்து, உங்களுடன் ஒத்துழையேன்; இது திண்ணம். எதிரியாக நின்று போர்புரிவேன்."

"தொகையில் குறைவாக இருப்பதனுல், தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று ஐரோப்பியர் கேட்கின்றனர். இத்தனை நாளாக ஐரோப்பியரே இந்தியாவிலே அரசாளுவோராக இருந்தனர். இனிமேல் ஐரோப்பியராகிய உங்களை எங்கள் தோழர்களாக, கூட்டாளிகளாக, சரி சமானமான மக்களாக, சுகதுக்கங்களில் பங்கு கொள்வோராக, நாங்கள் ஏற்றுக்கொள்வோம். ஐரோப்பிய வியாபாரிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இந்தியரின் நட்பைவிடச் சிறந்த பாதுகாப்பு ஒன்று உண்டோ? இந்தியரின் வியாபாரத்துக்கு இடையூருக இருப்பின், எத்த

கைய பாதுகாப்புச் செய்தாலும் இந்தியாவிலே ஐரோப்பியரின் வியாபாரம் ஒங்காது. பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தினல், இந்தியாவுக்குத் தீமையே முடிவான பலனும்."

பசியின் கொடுமை:—மீண்டும் அம் மெம்பர்களின் முன்னிலையில் மகாத்மா பேசியதின் சாரம்:—"நண்பர்காள்! அரசாங்கம் சற்றேனும் இணங்கிவரின், வட்ட மேஜை மகாநாட்டுக்கு வருவதாக லார்டுஇர்வினிடம் வாக்களித்தேன். அங்ஙனமே வந்துள்ளேன். பரிபூரணமான சுதந்தரமே எங்கள் தேவை. பணம், சேனை, எல்லாம் எங்கள் கையில் இருத்தல்வேண்டும். இதற்குக் குறைந்த எதுவும் எங்களுக்குத் திருப்தி அளிக்காது. உலகிலுள்ள யாருக்கும் எங்கள் சுதந்திரம் ஆபத்தாக இராது; மற்று அனுகூலமாக இருக்கும். இந்தியாவில் பிரிட்டிஷார் வகித்துள்ள ஆட்சியும் அதிகாரமும் கண்டு நான் கொதிக்கின்றேன்; நான் ஒரு பகிரங்கமான கலகக்காரன். எனது தேசமக்களில் ஆயிரக்கணக்கான பேர் அந்தரங்கத்தில் கலகக்காரராக இருக்கின்றனர். இதில் உங்களுக்குச் சந்தேகம் வேண்டாம். பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தை அறவே ஒழித்து, பரிபூரண சுதந்திரம் அடைய இந்தியர் விரும்புவதேன்? பசிப்பிணியே அதன் காரணமாம். இந்தியாவிலே ஏராளமான ராணுவம் எதற்கு? ஆங்கில ஆட்சிமுறையின் பான்மை பேரனர்த்தமாக இருக்கிறது. இந்திய மக்களிலே 100-க்கு 80 பேர் கிராமவாசிகள். ஆட்சிமுறையின் போக்கோ அவர்களின் இரத்தத்தை எல்லாம் உறிஞ்சிவிட்டது. இந்தியாவின் குடிசைத்தொழிலை நாசப்படுத்தியே லங்காஷயரின் மில்கள் கொழுக்கலாயின. பம்பாயிலும் கல்கத்தாவிலும் உள்ள மில்கள் பூகம்பத்தினல் அழிந்து, அன்னியத் துணியும் இந்தியாவுக்குள் வராமல் இருப்பின், தனக்கு வேண்டிய துணியனைத்தையும் ஒரு மாத காலத்தில் இந்தியா தேடியமைத்துகொள்ளும்."

7. இரத்தப் பெருக்கு

மகாத்மாவின் ஜன்மதினத்தன்று ஆங்கில அன்பர் ஒரு விருந்து நடத்தினர். அது சமயம் காந்திமகான் கூறியது:—"அன்பர்காள்! லண்டனுக்குப் புறப்படுகையில்

நான் மனக்கோட்டை கட்டவில்லை. காங்கிரஸ்-மகாசபையின் ஆணையினின்று பிறழ எனக்கு உரிமை கிடையாது. இங்கே நாள் ஆக ஆக, எனக்குக் கவலை அதிகரிக்கின்றது. ஆண்டவன் அருள் இருக்குமேல், நான் வந்த காரியம் கை கூடலாம். இந்தியாவின் விஷயமும் நிலையும் இங்கே பலருக்கும் தெரியவில்லை. சுதந்திரம் அடையவேண்டி, அரசாளுவோரின் இரத்தத்தைச் சிந்த இந்தியாவுக்கு இஷ்டமில்லை. இந்தியாவுக்கோ நெடுநாள் முன்னதாகவே சுதந்திரம் கிடைத்திருக்கவேண்டும். இந்த உரிமையை நிலை நாட்டவேண்டி, கங்கை மாநதி வெள்ளம்போல், தங்கள் இரத்தத்தைச் சிந்த இந்தியர் தயார்."

இங்கிலாந்தின் தலைநகரில் இருந்துகொண்டு, அமெரிக்காவுக்கு மகாத்மா விடுத்த செய்தி:—" ஆறறிவு படைத்த மானிடவர்க்கத்தார் மிருகங்களைப்போல் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்கின்றனர், பூசல் புரிகின்றனர். இஃது மானிடருக்கு ஓர் அழகாமோ? கோரமான வழி முறையில் இறங்கி, சுதந்திரம் பெற எனக்கு இஷ்டமில்லை; கல்பாந்த காலம் காத்திருக்க நேரினும், நேரிய நெறியில் நடந்து சுதந்திரம் எய்தவே நான் பிரியப்படுவேன். ஒருவரையொருவர் வெட்டிக்குவித்து இரத்தம் பெருக்குவதைக்கண்டு உலகம் உயிரிழக்கும் தன்மைக்கு வந்துவிட்டது. ஆதலால் இரத்தப் பெருக்கெடுக்கும் வழியை விடுத்து, ஒரு புதிய நன்னெறியைக் காட்டும் பாக்கியம் இந்தியாவுக்குக் கிட்டியுளது. அஹிம்ஸை முறையை ஆதாரமாகக் கொண்டு, இந்தியா தேசம் மகத்தான போராட்டம் புரிகின்றது. இப் போராட்டத்தில் இந்தியா வெற்றி பெற உலகிலுள்ள நல்லோர் அனைவரும் உதவிபுரிவாராக."

" இந்து முஸ்லிம் பிணக்கைக்கண்டு நான் தலையிறக்கம் கொள்கின்றேன். ஹிந்துக்களிலே லட்சக்கணக்கான பேர் " தீண்டாதார் " என்றிருத்தலும் அவமானமேயாம். இதற்குப் பரிகாரமாகவே தீண்டாமை விலக்கை முதன்மையாகக் கொண்டுளோம்; தேசீய ஒற்றுமையும் எங்கள் முக்கிய நோக்கங்களில் ஒன்றும்; குடியை ஒழித்தலும் எங்கள் கோட்பாடே. மதுவிலக்கு விஷயத்தில் அரசாங்

கம் எங்களுக்கு ஆதரவு தரவில்லை. இந்தியாவிலே அரை வயிற்றுக்கும் கால் வயிற்றுக்குங் கூடக் கஞ்சி கிடையாமல் வாடிவதங்கும் மக்களோ கோடிக்கணக்கு ஆவர். அன்னவரின் நிலையை உலகத்தார் உன்னிப் பார்த்தல் வேண்டும். இஃதே எனது வேண்டுகோள்."

8. வறுமை வாழ்வு


ஆசைதனக்கு அடியான் அகில லோகத்தினுக்கும் அடிமை ஆவான்; ஆசைதனை அடிமை கொண்டவனோ அகிலலோகத்தினையும் அடிமை கொள்வான். ஆசையை அறுத்தபின், ஈசனிருக்கும் இடத்தை அறிதல் எளிதாகும். காந்தியடிகளோ ஆசையனைத்தையும் உதறித்தள்ளியவர்; வலியவறுமையே பூண்டு அம்மகான் வாழ்கின்றார். இதன் காரணத்தை ஒருவர் லண்டனில் வினவினார். அதற்கு காந்தி பதிலளித்தது பின் வருமாறு:—" எனது வாழ்வும் காரியமும் ராஜீய நோக்குடையன என்று தோன்றும்; ஆனால் உண்மையில் பாரமார்த்திகத்தைச் சார்ந்தவையே. மானிடகோடிகளுக்குத் தொண்டு புரியவேண்டின், ராஜீயத்தை நான் அசட்டை செய்வதற்கில்லை. உலகெங்கும் உள்ள ராஜீய வாழ்வை நோக்கினால், அசத்தியமும் துன்மார்க்கமும் நிரம்பிக் கிடப்பதைக் காணலாம். ஆதலின் அவ்விரு தீமைகளும் அணுகாதிருக்க வேண்டின், எந்த ராஜீயவாதியும் சமூகத்தொண்டனும் வலிய வறுமை பூண வேண்டும். இந்த உண்மையை நெடுநாளைக்கு முன்பே நான் கண்டு கொள்ளலானேன். ராஜீய வாழ்வில் இறங்கியதும், வறுமை வாழ்வை வலிவில் ஏற்றுக்கொண்டேன். ஆதியிலே வறுமை வாழ்வு மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது; எனது மனைவிமக்களுடன் நான் போராடவும் நேரிட்டது. மகா ஜனங்களின் தொண்டனாக ஆனதும், செல்வத்துக்குச் சீட்டுக்கொடுத்தேன். என் மனைவி என்னுடன் அவ்வறுமை வாழ்வில் ஈடுபட்டு நிற்கின்றாள். எனக்கோ மக்கள் நால்வர். எளிய வாழ்வில் மூத்தமகனுக்கு நம்பிக்கை இல்லை. மற்ற மூவரும் என்னுடன் கூடி வறுமை வாழ்வில் ஈடுபட்டுத் தத்தளித்து, அதனை ஒருவாறு சமாளித்து வருகின்றனர்."

புரட்சியாளர்:—வெடிகுண்டும் துப்பாக்கியும்கொண்டு தொண்டுபுரியும் புரட்சிக்காரரைப்பற்றி மகாத்மா பேசியது:--" எங்களிலே புரட்சியாளரும் இருக்கின்றனர். வெடிகுண்டிலும் துப்பாக்கியிலுமே அவர்களுக்கு நம்பிக்கை. அத்தகைய இளைஞரில் பலரை நான் அறிவேன்; அவர்களுடன் நான் வசித்திருக்கின்றேன்; அவர்களுடன் நான் நெருங்கிப் பழகியதும் உண்டு. அவர்களோடு நான் நீண்ட நாள் உரையாடிநின்றதும் உண்மை. அவர்களுடைய வழிமுறை தவறானது. இஃதே எனது கருத்து. என் சகாக்களும் அவ்விதமே கருதி யிருக்கின்றனர். ஆனால் அப் புரட்சியாளரின் நோக்கும் எங்கள் நோக்கும் ஒன்றேயாம். அது தேச விடுதலையே. இங்கிலையில், தவறான வழி முறையிலிருந்து அப்புரட்சியாளரைத்திருப்ப நான் எவ்வளவோ முயன்றேன்; எனது சகாக்களும் முயன்றனர். இந்தியாவின் பிறப்புரிமையான சுதந்திரத்தை நிலைநாட்டவே அப் புரட்சியாளர் துடித்து நிற்கின்றனர். அவர்களுடைய நெறி முறையினால், காங்கிரசுக்கு இடையூறு நேருவதாக அந்தரங்கமாகவும் பகிரங்கமாகவும் அவர்களுக்கு நான் சொல்லியிருக்கிறேன். அவர்களால் தேச முன்னேற்றம் தடைப்படுகின்றது. ஹிம்சையில் இறங்கும் அந்த இளைஞரின் போக்கினால், அவர்களுக்கும் தேசத்துக்கும் ஏழைகளுக்கும் தீமைதான். அஹிம்சை முறையே சிறந்த முறை."

9. நான் யார்?

இங்கிலாந்திலே தொழிலாளரின் பத்திரிகையாக விளங்குவது டேய்லி ஹெரால்டு. அதில் மகாத்மா எழுதியுள்ள கட்டுரை:— "நான் எதற்காக இங்கிலாந்துக்கு வந்துள்ளேன்? எனது நம்பிக்கை யாது? நான் அமைக்கவிருக்கும் இந்தியா எங்ஙனம் இருக்கும்? இவற்றிற்கு விடை யறியப் பலரும் ஆவலாக இருப்பர்.

"சத்தியமே உயிர் வாழ்க்கைக்கு அடிப்படை. அதனை நிலை நாட்டவே இங்கு வந்துள்ளேன. எதுவும் சத்தியத்தையே சார்ந்துள்ளது. எதிலும் சத்தியத்தையே முதன்மையாக நாம் கொள்ளல் வேண்டும். அங்ஙனமே நடக்க நான் முயலா நிற்கின்றேன். எனது ராஜீய அபிலாஷை



லண்டன்மா நகரில் வெள்ளைமாதரின்



ஜயகோஷம். (காந்தி தாதாவுக்கு ஜே !)

களில், பொய்க்கும் சூதுக்கும் இடம்கிடையாது. எத்தகைய காரியமாயினும் சரி, மோசம் என்பதைக் கருதேன். என்னைக்குறித்துப் பலர் பலவாறு சொல்லுகின்றனர், சிலர் என்னைத் துறவி என்கின்றனர். சிலரோ கயவன் என்கின்றனர். நான் துறவியும் அல்லன், கயவனும் அல்லன். ஆண்டவனுக்கு அஞ்சி நடக்கும் கண்ணிய புருஷனாக இருக்க வேண்டும் என்பதே எனது அவா. என்னைப் பற்றி ஏளனமாகச் சிலர் பேசியும் எழுதியும் வருதல் கண்டு, நான் மனக்கசப்புக் கொள்ளவில்லை. நாள்தோறும் சிறிது நேரம் நான் நூற்கின்றேன்; நூற்கும் காலையில் சிந்தனை செய்கின்றேன், மனக்கசப்புக்கு நான் இடம் கொடுப்பதில்லை. எனது கைராட்டையின் தன்மையை அனைவரும் ஊகித்து உணரவேண்டும். அது பல விஷயங்களையும் போதிக்கும். பொறுமை, சுறுசுறுப்பு, எளிமை முதலிய குணங்களை அது ஊட்டும்; வயிறுகாயும் இலட்சக்கணக்கான இந்தியமக்களுக்கு அக் கைராட்டையே கதியாம்."

"எனது உடை கண்டு சிலர் பரிகாசம் செய்கின்றனர். அத்தகைய ஆடையை நான் ஏன் தரிக்கவேண்டும் என்று சிலர் கேட்கின்றனர்; அந்த உடைகண்டு வெறுக்கின்றனர். ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வருகையில், தங்களுக்கு உரிய உடையை அன்னார் கைவிடுகின்றனரோ? எங்கள் தேசத்திற்கு உகந்த ஆடைதான் அணிகின்றனரோ? இல்லையே. இங்கிலாந்திலேயே தங்கிவாழ நான் வந்திருப்பின், ஆங்கிலேயரைப்போல் நான் ஆடை தரிக்க வேண்டியதுதான். ஒரு பெரிய காரியத்தின் பொருட்டு நான் இங்கு வந்திருக்கிறேன். எனது எஜமானர்களான இந்திய மக்கள் தரிக்கும் ஆடையையே நான் தரித்திருக்கின்றேன். என்மீது மகத்தான கடமை சுமந்துள்ளது. அக்கடமைக்கு ஏற்ற உடையே நான் கொள்ள வேண்டும். என்னைப்பற்றிப் பலர் பலவாறு பேசுதல் கண்டு எனக்கு வேடிக்கையாகவே இருக்கின்றது. கோபமோ தாபமோ இம்மியளவும் எனக்கு ஒரு போதும் தோன்றியதில்லை.

"மாதருக்குச் சரிசமமான உரிமை தேவைதான். நான் அமைக்கவிருக்கும் இந்தியாவில் மாதருக்கு அவ்விதம் உரிமை இருக்குமாறு நான் வழிகோலுவேன்.

எனது சகாக்களாக மாதர் பலர் உளர். இதன் காரணம் யாது? நான் பிரம்மச்சரிய விரதம் கொண்டிருத்தல் ஒன்றாகும்; மற்றொன்றோ அவர்களிடம் நான் இயற்கையான அபிமானம் வைத்திருப்பதாம். என்னுடைய தேசத்திலே மாதர் தாழ்ந்த நிலையில் இருப்பதாக ஐரோப்பியர் எண்ணலாம். தாழ்ந்தநிலை என்பது வெளித் தோற்றத்தில் தான். அவர்களுக்கு உள்ள செல்வாக்கோ மிக அதிகம். பல நூற்றாண்டுகளாய் ஆடவருக்குச் சரிசமானமாகவே மாதர் உழைத்துவந்துளர். அவர்கள் உழைக்கவில்லையானால், ஆடவரிலே பலர் பட்டினியாய்ப் போக நேரும். பயிர் பண்ணுவதில் எங்கள் ஆடவரும் மாதரும் சேர்ந்து உழைக்கின்றனர். செல்வம் நிரம்பிய மாதரே தங்கள் கடமையையும் பயனையும் மறக்க நேர்கின்றது. பணக்காரப் பெண்கள் கேவலம் அணிகளாக அல்லது விளையாட்டுப் பொருள்களாக ஆகிவிட இடமுண்டு. எல்லா உத்தியோகங்களிலும் தொழில்களிலும் அமர மாதருக்கு வழி இருக்கவேண்டியது தான். இல்லையேல், சரிசமத்துவம் என்பது இராது. ஆனால் நெடுங்காலமாக மாதர் விட்டரசியராக இருந்துவந்துளர். அத்தகைய பதவியை அவர்கள் இழத்தல் கூடாது. வீட்டின் நடுநாயகமாக மாதர் இராவிடின், குடும்பவாழ்வு சோபிக்காது. டைப் அடிக்கும்வேலையில் அமர்ந்துள்ள ஒரு மாது தனது குடும்பத்தைக் கவனிக்கப்பண்ண இடமுண்டோ? ஏழைகளுக்குக் குழந்தைகளே அரிய ஆஸ்தி. அக்குழந்தைகளைக் கவனிப்பது யார்? சமர்த்தான மாதொருத்தி உத்தியோகம் பண்ணி, சம்பாதித்து, குடும்பவருமானத்தைப் பெருக்கி, குழந்தைகளைப் பாதுகாக்கத் தாதிமார்களை நியமிக்க முடியுமே என்று சிலர் சொல்லலாம். ஆயிரத்தில் ஒருத்தி தான் அப்படி இருக்கமுடியும். பொதுவாகப்பார்த்தால் தந்தையே குடும்பத்தின் போஷணைக்கான வருமானத்தைத் தேடுவோனாக இருத்தல்வேண்டும். வீட்டுக்கவலை இன்றேல், அவன் நன்கு உழைத்து நல்ல பணம் சம்பாதிப்பான். தாயின் அன்பான பராமரிப்பின்றிக் குழந்தைகளைத் தாதியரிடம் ஒப்படைத்தல் பெருத்த அநீதியாகும். குழந்தைகளைப் போஷித்துச் சன்மார்க்கனுக்குதல் தாய்க்

கே உரிய கடமை. அஃது மிக அருமையானகடமையும் ஆகும். ஆடவருக்கும் மாதருக்கும் சமமான அந்தஸ்து அவசியம். ஆயினும், தாய் தன் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய அரிய கடமையில் தவறுதல் தகாது. எந்த ஜாதியாரானாலும் சரி, குடும்ப வாழ்க்கை என்பது மிக முக்கியமானது. குடும்பவாழ்க்கையின் பெருமை கெடலாமோ? குடும்பவாழ்க்கை சரிவர இருந்தால்தான் தேசமக்கள் சுகமே வாழமுடியும். தொட்டில் பழக்கமே அனேகநாள் வரையில் நிடிக்கின்றது. குடும்பவாழ்வே கோலமான வாழ்வாம்; அவ்வாழ்விறுக்குப் பங்கம்நேராமல் காத்தல்வேண்டும். காசினி சிறக்க அதுவே மார்க்கம்."

10. நடை பிணங்கள்

இலங்காஷயர் என்பது இங்கிலாந்தின் பிரபல நெசவுத்தலம். அங்கே நெசவாகும் துணிகள் நம்தேசச்செல்வத்தைக்கொள்ளை கொள்கின்றன. கதர் இயக்கம் வலுத்த பின்னர், ஆங்குள்ள நெசவாலைகள் பல மூடப்பட்டுப் போயின. அதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர் வேலையின்றி நிற்கின்றனர். நெசவாலைச் சொந்தக்காரர்கள் அழைத்ததன்மேல் காந்தியடிகள் அங்கே போனார். அங்கே அவர் பேசியதின் சாரம் இது:—" பிறதேசத்தின் நலத்தைப் பறித்து என் தேசம் சுகமடைய வேண்டும் என்று நான் விரும்பேன். கதர் இயக்கம் காரணமாக உங்களுக்குக் கஷ்டம் உண்டுதான். இந்தியாவின்கதர் இயக்கத்தினால்தான் கஷ்டம் நேர்ந்தது என்பதில்லை. இன்னும் பல காரணங்களும் உண்டு. எந்த அன்னிய தேசத்துணியையும் வாங்கக்கூடாது என்பதே எங்கள் சபதம். எனினும் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் நிலையான சமரஸம் ஏற்படின், எங்களுக்குத் தேவையான துணிகளை உங்களிடமிருந்து வாங்க ஒப்புவோம். உங்கள் தொழிலாளரில் பலருக்குப் பிழைப்பு இல்லை என்பது மெய்தான். என்றாலும் இங்கே பசிப்பிணி என்பது இல்லை. எங்கள் தேசத்திலோ கிராமவாசிகள் பசிப்பிணியால் வாடுகின்றனர், தோலும் எலும்புமாக இருக்கின்றனர்; நடைபிணங்களாகவும் அன்னார் திரிந்து தவிக்கின்றனர்.

"உங்களிலே பிழைப்பு இல்லாமல் தவிக்கும் மக்கள் முப்பது லட்சமே. எங்கள் தேசத்திலோ முந்நூறு லட்சமாகும். உங்களிலே வேலையில்லாதோருக்கு மாதாமாதம் அரசாங்கம் கொடுக்கும் சகாயத்திரவியம் சராசரி 70ஷில்லிங் ஆகும். (ஒரு ஷில்லிங் என்பது முக்கால் ரூபாய்க்குச் சரி). எங்கள் தேசத்திலே மக்களின் சராசரி மாத வருமானம் ஏழரை ஷில்லிங்கே. எனவே முந்நூறு லட்சம்பேர் பிழைப்பின்றி இருக்கும் நிலைமையை எண்ணிப் பாருங்கள்; இன்னும் லட்சோப லட்சக்கணக்கான மக்களோ அந்நிலைக்கு ஆளாகி வருகின்றனர். பசி வந்திடப் பத்தும் பறக்கும் அல்லவா? ஆண்டவனைப்பற்றி அவர்களுக்குச் சிந்தனையே கிடையாது, அவர்களுக்கு உணவே கடவுள்; வயிறுநிரம்பிய பின்பன்றோ நாம்கடவுள் நினைவு கொள்கிறோம். வேலையில்லாக் கஷ்டகாலத்திலும் நீங்கள் ஓரளவு சுகமாக இருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் சுகமே இருப்பீர்களாக. ஆனால், லட்சோபலட்சக் கணக்கான இந்தியரைப் பசியால் மடியச்செய்து, அதன் பலனைச் சுகமடைய வேண்டும் என்று எண்ணுதீர்கள். உங்களிடம் எனக்கு வெறுப்பு இல்லை. அல்ப உயிரையும் சோதரனாக எண்ணுதல் எனது இயற்கை. எனவே ஆங்கிலேயரான உங்களிடம் எனக்கு வெறுப்போ கசப்போ இல்லை; இது நிச்சயம். என்ன நேர்ந்தபோதிலும், எனது தேசமக்கள் சுகமே வாழவேண்டும் என்பதற்கு எனது உயிரையும் நான் தயங்காமல் வழங்குவேன்."

11. மாளிகைகளைப் பிடுங்குவேன்

காந்திமகானது உள்ளக்கருத்தைப் பலர் பலவாறு கொள்ளலாயினர். அதுபற்றி அவர் பட்டவர்த்தனமாகக் கூறியது இது:-"எங்களுக்குள்ளே பிளவை உண்டுபண்ணி, ஒற்றுமையைக் குலைத்து, இந்தியாவை ஆங்கிலேயர் ஆண்டு வந்துளர். அன்னிய ஆட்சிமுறை என்னும் ஆப்பு இருக்கும் வரையில் இந்தியர் பிளவுபட்டே கிடப்பர்; அப்பிளவு இன்னும் விரிந்து பரவும். வட்டமேஜை மகாநாட்டின் அமைப்போ ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்குப் பங்கம் விளைக்கின்றது. பிரதிநிதிகள் அனைவரும் பிரதம மந்

திரியால் நியமிக்கப்பட்டவர்கள். தக்க ஒரு பிரதிநிதியை அனுப்பவேண்டும் என்று தேசிய முஸ்லிம்களுக்கு அறிவித்திருந்தால், அவர்கள் டாக்டர் அன்ஸாரியைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருப்பர். தற்போதுள்ள முகம்மதியப் பிரதிநிதிகளும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின், அவர்கள் மிக்க பொறுப்புடன் நடந்துகொண்டிருப்பர். ஒவ்வொரு பிரதிநிதியும் அளவுக்கு மிஞ்சிய உரிமை வேண்டுகின்றனர். ஆட்சிமுறையை இந்தியரிடம் ஒப்படைத்துவிடப் போவதாக அரசாங்கம் சொல்லட்டும். உடனே, ஒற்றுமை உண்டாகிவிடும். மெய்யான சுதந்திரம் கிடைக்குமென ஒருவருக்கும் நம்பிக்கை இல்லை. ஆதலினால் தான் எங்களிடம் ஒற்றுமை உதயமாகவில்லை. இந்நிலைக்குக் காரணம் யார்? எண்ணிப் பாருங்கள்.

" உடம்பில் விஷங் கலந்திருப்பது போலுளது அன்னிய ஆட்சி. விஷம் நீங்கின், உடல் குணப்படும். அங்ஙனமே அன்னிய ஆட்சி அகலின், இந்தியா சுகமடையும். இந்தியாவின் நலத்தை இங்கிலாந்து சுரண்டிக்கொண்டே இருக்கின்றது, அச்சுரண்டல் நிற்குமேயானால், உடனே இந்தியாதேசம் சுபிட்சமாக இருக்கும். பிரிட்டிஷ் வணிகரின் கொள்ளையை என்னென்று சொல்வது? நாணயச் செலவாணி எனும் ஜாலவித்தை, நிலவரிபோன்ற வரிகள் இவைமூலம் பிரிட்டிஷ் வணிகர் கொள்ளும் கொள்ளை கூறுந் தரமன்று. ஆங்கில ஆட்சி என்பது கட்டுப்பாடாக இந்தியாவின் நலத்தைச் சுரண்டுவதாகவே உளது."

" சுதேசமன்னரைப்பற்றியோ என்றால் எனக்கு அதிகாரம் இருப்பின், அவர் தம் ஆடம்பரமான மாளிகைகளைப் பறித்துவிடுவேன்; தவிர, டில்லிமாநகரில் ஆங்கில அரசாங்கம் கட்டியுள்ள மாளிகைகளையும் பறிக்கத்தயங்கேன். எண்ணிறந்த மக்கள் பசியால்வாட, தாகத்தால்தவிக்க, ராஜப்பிரதிநிதிக்கு மாளிகைகள் எதற்காக? கோடிக்கணக்கான பணத்தைக் கருணையின்றி மாளிகைகளில் செலவழிப்பதா? ஆங்கிலேயரின் கண்மூடித்தனமான அடாத செலவுக்கு வேறு உதாரணம் வேண்டுமோ? இனி, ஒன்று மனைவியுடன் வசிக்கவேண்டும், அல்லது தீண்டாதானாக வாழவேண்டும், எனும் நிர்ப்பந்தம் எனக்கு ஏற்

பட்டால், தீண்டாதானாகவே நான் வசிக்க விரும்புவேன். எனது சபர்மதி ஆசிரமத்தில் தீண்டாதார் பலர் வசிக்கின்றனர். எனது மகளைப்போல் தீண்டாதபெண்ணொருத்தி வாழ்ந்து வருகின்றனள். இந்தியாவுக்குப் பரிபூரண சுதந்திரம் கிட்டுவதாயின், எத்தகைய ராஜிக்கும் நான் தயார்.”

12. ஜனக்கலகமே மேல்

உள்ளக்கருத்தை உள்ளபடி காந்தி கூறியவிவரம்:—“இந்தியாவைவிட்டு ஆங்கிலேயர் போய்விட்டால், உடனே ஜனக்கலகம் உண்டாகும் என்கின்றனர். இது உண்மை என்றே நாம் வைத்துக்கொள்வோம். அன்னிய ஆட்சியில் அடிமையாகக் கிடப்பதைவிட அக் கலகமே மேலாகும். ஜனக்கலகம் ஓய்ந்ததும், ஒற்றுமைஉண்டாகிவிடுமே. ஆங்கில ஆட்சியினால் இந்தியாவுக்கு நன்மை உண்டா? தீமை தானா? என்று தீர்ப்புச்சொல்லவேண்டியது யார்? ஆங்கிலேயரா? அன்று அன்று! இந்தியராகிய நாங்களே சொல்லவேண்டும். தாதாபாய் நவரோஜி, பிரேஷிஷா மேட்டா, ரானடே, கோகலே முதலியோர் ஆங்கில ஆட்சிகண்டு மோகங்கொண்டு கிடந்தனர். முடிவாகப் பார்த்தால், அந்த ஆட்சி தீமையாகவே உளது என்று அவர்களும் ஒருமனதாகக் கூறியுளர். வலியற்ற மக்களென எங்களைச் சிலர் சொல்லுகின்றனர். நல்லது; எங்கள் நெஞ்சுரப்போ எதற்கும் அசையாது. ஒடிந்துவிடும்படியான மெல்லியசரீரமும் எழுத்துவாசனையில்லாத தன்மையும் கொண்ட இந்தியமாதர்—ஸரோஜினி தேவிக்குச் சளைத்தவர்கள் அல்லர்—சத்தியப் போரிலே முதுகுகொடாமல் தடியடி பெற்றிருக்கின்றனர். இந்தியரிலே பல்லாயிரக் கணக்கான மக்கள் இரும்புமனம் கொண்டிருக்கின்றனர். மாதரோ அன்னிய ஆட்சிகண்டு பொறுமை இழந்து நிற்கின்றனர்.”

“காங்கிரஸ் மகாசபை சாமானியமான சபையோ? இத்தனை நாளாக சுதந்திரப்போர் புரிந்து வருவது அச்சபை ஒன்றுதான். காங்கிரஸ் மகாசபையின் ஆணையைச் சிரமேற்கொண்டு, கோடிக்கணக்கான மக்கள் சொல்லொணாக் கஷ்டநஷ்டம் அடைந்தனர்; அபார தியாகம்செய்தனர்; ஆருயிரையும் இழக்க முன்னின்றனர். ஒரு கைக்

கூழ் கிடைத்தால் போதும் என்று இத்துணைத் தியாகம் செய்தோம்? கஷ்டநஷ்டமும் தியாகமும் அடைந்தோர் ஹிந்துக்கள் மட்டும் அன்று, முஸல்மான்கள், சீக்கியர், பார்ஸியர், கிறிஸ்துவர் முதலிய எல்லோருமே. பெரும்பாலான வகுப்பார், சிறுபாலான வகுப்பார் என்பது ஏது? யாவருக்கும் எல்லா சுதந்திரமும் தர காங்கிரஸ் மகாசபை தயார். முஸ்லிம் இந்தியா, கிறிஸ்துவர் இந்தியா, தீண்டாதார் இந்தியா, என்று இந்தியாவைத் துண்டாக்க நான் ஒரு நாளும் சம்மதியேன். தனியான பிரதிநிதித்துவம் எதற்காக? உண்மையில் ஜனங்களுக்கு உழைப்பதாயின், தனிப் பிரதிநிதித்துவம் அவசியமில்லை. இந்தியாவிலே பார்ஸியர் என்போர் எல்லாரையும்விட ஜனத்தொகையில் மிகவும் குறைந்தோர். தேசசேவையே பிரதானம் என்று கொண்டதும், அவ் வகுப்பினரான தாதாபாய் நௌரோஜி, ஸர் பிரோஸிஷா மேட்டா இருவரும் தேசியத் தலைவர்களாகத் துலங்கினர். தாதாபாயின் பேத்தியோ கூர்ஜர சர்வாதிகாரி ஆயினள். கூர்ஜர நாட்டு மக்களின் மனத்தை அவள் தனது ஊழியத்தால் கவர்ந்து கொண்டனள். எல்லைப்புற பட்டாணியரின் மனத்தைக் கவர்ந்து இன்று மகிமையாக இருக்கின்றாள்."

13. நீங்கள் யார்?

ஆங்கில மக்களை நோக்கி மகாத்மா கூறியது:— "இந்தியாவின் விஷயத்தில் சிரத்தைகொள்ளுமாறு உங்களைத் திருப்பவே நான் எண்ணியுள்ளேன். ஆதலின், நான் பொறுமை பூண்டிருக்கவேண்டும். உங்கள் மனத்தைத் திருப்பவேண்டி, தர்க்கம் செய்து பார்ப்பேன், மண்டியிட்டுக் கேட்டுப்பார்ப்பேன், கெஞ்சியும் நிற்பேன்; இன்னும் இதர வழிகளையும் கையாளுவேன். சில சமயங்களில் எனக்கும் பொறுமை குன்றுகின்றது. ஆதலின், உள்ளதை உரைத்து உடம்பெரிச்சல் உண்டுபண்ண நேருகின்றது. உதாரணமாக வட்டமேஜை மகாநாட்டின் அமைப்பைக் குறித்து உள்ளது பேசியதனால் ஒரு சிலருக்கு மனம் கசந்திருக்கின்றது. என்ன செய்யலாம்! உங்களைத் திருப்புவதற்கான வகையெல்லாம் பார்த்த

பின், பலன் இன்றேல் இந்தியாவுக்குத் திரும்பிவிடுவேன். இந்தியாவில் உள்ள பாமரமக்கள் என்பாரோ பரம துடிப்புக்கொண்டுளர். பூரண சுதந்திரம் இன்றி வேறெதை யும் அவர்கள் ஏற்கமாட்டார்கள். உங்களுக்கு இஷ்ட மிருந்தால், உங்கள் உதவிகொண்டு பரிபூரண சுதந்திரம் எய்துவோம்; நீங்கள் மறுப்பின், உங்கள் உதவியில்லாமல் நாங்கள் அச்சுதந்திரம் அடைந்துவிடுவோம். சுதந்திர சித் தியை நோக்கி நாங்கள் முன்னேறிச் செல்கையில், யாரும் எத்தகைய சக்தியும் எங்களைத் தடைப்படுத்த இயலாது. பரிபூரண சுதந்திரம் எய்தின், நாங்கள் தவறு இழைப் போம் என்கிறீர்கள். தவறு இழைக்கவும் சுதந்திரம் வேண்டும். பெரும்பிழை புரிந்தும் முடிவிலே வெற்றி பெறுதல் உங்கள் இயற்கை. அங்ஙனமிருக்க எங்களைத் தடைப்படுத்த நீங்கள் யார்?"

உப்புக்கும் வரியா? மோகனதாஸ் காந்தி ஓர் அன்ப ருடன் லண்டனிலே பேசியிருந்தார். அப்போது அவர் விளம்பிய வார்த்தைகள் இவை:—"பரம ஏழையான இந்திய விவசாயிகளை ஒரிஸா மாகாணத்தில் பார்க்கலாம். அங்கே உழவர் எலும்பும் தோலுமாகவே இருக்கின்ற னர். ஆடுமாடுகளும் எலும்புக்கூடுபோல் இருக்கும். அவர்களின் நிலையை உயர்த்தவேண்டுமானால், வறுமை நோயை ஒழிக்கவேண்டும். பாலும் பழமும் உண்ணின், அவர்கள் உடல்வலி கொள்வர். உழவரின் பரம தரித் திர நிலையைக் கவனிக்கையில், பாலும் பழமும் உண்ண நான் வெட்கப்படுகிறேன். அரசாங்கச்செலவு அபாரமாக இருக்கையில், அதன் காரணமாக தேசச்செல்வம் சுரண் டப்படுகையில், அவர்களின் நிலையை உயர்த்தல் எங்ங னம்? வாழ்வுக்கு அதி யவசியமான உப்புக்குமா வரி? அரசாங்கத்தின் கலால் வருமானமோ மிக அதிகம். அவ் வருமானத்தை எங்ஙனம் ஒழிப்பது? சேனையின் செல வைக் குறைத்தால்தான் முடியும். பயங்கரமான அக் கொள்ளைச் செலவு தொலையவேண்டும். இந்தியாவிலே வெள்ளைச்சேனை இருக்க அவசியமே இல்லை. ஸிவிலியன் களுக்கோ ஏராளமான சம்பளம் கொடுக்கவேண்டி யிருக் கிறது. இத்தகைய சம்பளம் எங்கும் இல்லை."

"ராணுவ ஸ்தலங்களால் ஜனங்களுக்கு நேரும் தொல்லையோ கூறும் தரமன்று. ராணுவ ஸ்தலங்கள் உள்ள இடத்திலே யாரேனும் வீடு கட்டினால், அவசியமான போது அதனைப் பறித்துக்கொள்ள ராணுவத்தாருக்கு அதிகாரம் உளது. எனது நண்பரொருவர் கட்டியிருந்த வீடு அவ்வாறே பறிக்கப்பட்டுப் போயிற்று. வெள்ளைச் சேனை இன்றேல், பட்டாணியர் புகுந்து பரிபவம்காண்பர் என்று அதிகாரிகள் பயமுறுத்துகிறார்கள். சேனையின் பாதுகாப்பு எனக்கு வேண்டாம். எனது இஷ்டப்படி என்னை நான் காத்துக்கொள்வேன். ஒன்று, அப்பட்டாணியருடன் நான் போர் புரிவேன்; இன்றேல் அவர்களுடன் சமரஸம் கொள்வேன். வெள்ளையரில் சிலரை எங்கள் சேனையில் சிறிதுகாலம் வைத்திருக்க நாங்கள் ஒப்புகிறோம். ஆனால், பிரிட்டிஷ் ஸோல்ஜர்கள் இந்தியரின்கீழ் சேவகம் செய்யமாட்டார்களாம். இந்தியாவின் கஷ்டங்கள் இன்ன என்று ஆங்கிலேயரில் பலருக்குந் தெரியவில்லை. பிரிட்டிஷ் மகுடத்தின் மாமணி இந்தியாவே என ஆங்கிலேயர் எண்ணியிருத்தல் சரியே."

"நாங்கள் சுதந்திரம் அடைவதில் சமஸ்தான மன்னர் குறுக்கிடார். எங்களைப்போலவே மன்னரும் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியிருக்கிறது. சுயராஜ்யம் பெற்றுவிடின், எங்களுக்கு உட்பட்டிருக்க மன்னர் மனமொப்பார் என்று தோன்றலாம். அவர்களும் இந்தியர்தானே. மன்னரில் ஒருவர்கூட இஷ்டப்படி நடப்பதற்கில்லை. நிஜாம் அரசர் ஒரு வேலைசெய்யத் திட்டம் போடலாம். ராஜப் பிரதிநிதியிடமிருந்து கோபமான கடிதமொன்று வந்துவிடின், நிஜாம் அரசர் உடனே அவ்வேலையைக் கைவிட்டுவிட நேரும். ஆங்கிலேயருடன் போராடும் திறம்படைத்த நாங்கள், அவசியமாயின் மன்னருடனும் போராட முடியும். போராட்டத்திலே தடிகொண்டு ஆங்கிலேயர் அடித்தனர் என்றால், துப்பாக்கிகொண்டு மன்னர் சுடுவர் என்று சிலர் சொல்லக்கூடும். அவ்வளவு துணிச்சல் மன்னருக்கு இருக்காது. ஆங்கில நாகரிகம்வந்து, அனாவசியமான பொருள்களை எங்கள் தலையில் சுமத்தியிருக்கிறது. ஸோப் எதற்காக?

பகிஷ்கார இயக்கத்தின் வன்மையை நாங்கள் கண்டு கொண்டுள்ளோம். ஒருசமயம் உடனே பூரண சுதந்திரம் அளிக்க இங்கிலாந்து மறுக்கலாம். வட்டமேஜை மகாநாட்டினால், காரியசித்தி உண்டாகும் என்று நான் எண்ணவில்லை. ஈசன் இருக்கின்றான்."

14. ஏன் கவலை?

தொழிலாளர் கூட்டத்தில் எழுந்த கேள்விகளுக்கு மகாத்மா பதில் தந்தது:—"இந்தியாவை விட்டு ஆங்கிலேயர் அகன்று விடின், ஹிந்துக்களும் முகம்மதியரும் அடித்துக்கொள்வார்களே என்று ஆங்கிலேயர் ஏன் கவலைப்படவேண்டும்? அங்ஙனம் அடித்துக்கொள்ள நேரினும், அக்கறையில்லை. முன்னம் இங்கிலீஷ்காரரும் ஸ்காட்லாந்துக்காரரும் அடித்துக்கொள்ள வில்லையா? சமீபத்தில் ஆங்கிலேயரும் ஐரிஷ்காரரும் ஒருவர் மீது ஒருவர் பாயவில்லையா? அன்னிய ஆட்சி நீடித்திருக்கும் வரையில், இந்திய மக்களின் ஆண்மை குன்றிக்கொண்டே போகும். ஆங்கிலேயர் தோன்றுவதற்கு முன்னம் முஸ்லிம்களுடன் சரிசமானமாக ஹிந்துக்கள் வாழ்ந்து வந்தனர். இப்போதும் பெலுஜிஸ்தானத்தில் முகம்மதியரே மிகுதியாக இருக்க,ஒன்றிரண்டு ஹிந்துக்களே உளர். அந்த ஹிந்துக்கள் அங்கே நிம்மதியாக வாழவில்லையா? காபூல் நகரில் ஏராளமான ஹிந்துக்களும் சீக்கியரும் சமரஸமாக வாழ்ந்து வருகின்றனர்."

"இந்தியாவோ அஹிம்ஸாக்கொள்கை பூண்டு நிற்கின்றது. ஆதலின் பிற உயிரை வாங்கும் எண்ணம் இந்தியாவுக்கு உதிக்காது. எங்கள் உயிரும் சாமானியம் அன்று. ஆனால் சுதந்திரமோ அவசியமானது. அதனை அடையும் பொருட்டு, அவசியமாயின் எங்கள் ஆருயிர்களிலே பத்து லட்சத்தைப் பலிகொடுக்க நாங்கள் தயங்கோம். அப்போது ஆண்டவனும் சபாஷ் என்பான். பரிபூரண சுதந்திரம் வேண்டும் என்று உங்களைக் கெஞ்சிக் கேட்க நான் வரவில்லை. போனவருஷம் நாங்கள் எவ்வளவோ கஷ்ட நஷ்டம் அடைந்தோம். அதுகண்டு உங்களது மனம் சுமுகமாக மாறியிருக்குமோ என்று அறியவே

நான் இங்கு வந்திருக்கிறேன். இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் கௌரவமான சமரஸம் ஏற்படவேண்டும். அவ்விதம் ஏற்பட்டு நான் திரும்பின், உங்களிடம் சுதந்திர தானம் பெற்று விட்டதாக நான் எண்ணவே மாட்டேன். சுதந்திரம் என்பது கொடையாகக் கிடைக்கக்கூடிய ஒன்று அன்று. இரத்தம் சிந்தி அதனை அடைதல் வேண்டும். 1919-ஆம் ஆண்டிலிருந்து நாங்கள் எவ்வளவோ எங்கள் இரத்தத்தைச் சிந்தியுள்ளோம். சிந்தின இரத்தம் போதாது என்று ஆண்டவன் கருதுகின்றான்போலும். இந்தியாவைக் கட்டியாளவேண்டும் என்ற எண்ணம் ஆங்கிலேயரை விட்டகலும் வரையில், எங்கள் இரத்தஞ் சிந்த நாங்கள் தயார். இங்கிலாந்து போய்விடின், ருஷியா வந்து இந்தியாவைக் கட்டியாளுதல் என்பதும் நடக்காது. உங்களிடம் கையாண்ட ஒத்துழையா இயக்கத்தைக் கையாண்டு ருஷியாவையும் போக்கடிப்போம்."

15. பத்து லட்சம் உயிர்

ஆங்கில மாணவர்களின் முன்னிலையில், மகாத்மா கூறிய வாசகம்:—" ஆங்கிலேயர் எங்கள் இந்து தேசத்தின் உண்மையான சரிதத்தை உணரவில்லை. எங்கள் தேசநிலையையும் அன்னார் கூர்ந்து அறியவில்லை. ஆதலினால் தான் எனக்கும் அவர்களுக்கும் இடையே பெருஞ் சந்து இருக்கின்றது. அச் சந்து இல்லாமல் மறைந்துபோகவே நான் முயன்று வருகிறேன். வட்டமேஜை மகா நாட்டின் முன்னே நின்று பேசுவதில் பலன் இராது என்று நினைக்கிறேன். சிறைக்கூடக் கதவுகளின் பின்னே இருந்து கொண்டு பேசினால், இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் சமரஸம் ஏற்படலாம். இங்கே இந்தியாவின் சுதந்திரத்தைப் பெற என்னால் ஆகவில்லையானால், உடனே இந்தியாவுக்குச் சென்று, சட்டமறுப்பில் இறங்கி, மன மலர்ச்சியுடன் 10-லட்சம் உயிர்களைத் தியாகம் செய்யுமாறு என் தேசத்தாரை வேண்டிக்கொள்வேன்."

உயர்வோர் தாழ்வோர்:-இந்திய மாணவரின் முன்னிலையில் மகாத்மா செய்த உபந்நியாசம் இது:—"பேச்சு வார்த்தையும் தர்க்கமும் வேண்டுகோளும் கொண்டு சுதந்

திரம் எய்தலாமென வந்திருக்கிறேன். இன்றளவும் அம்முறையில் சுதந்திரம் எய்தியதற்கு உதாரணம கிடையாது. சுதந்திரம் என்பது தீரத்தின் விளைவு. எனது தலையின் மீது சுமர்ந்துள்ள பொறுப்போ மிக அபாரம். எனினும் நம்பிக்கையுடன் முயன்று வருகின்றேன். எல்லாரும் என் முயற்சிக்கு ஆசி கூறுகின்றனர். என் முயற்சி பலனளிக்குமாறு ஆண்டவன் அருள்புரிவானாக. சுதந்திரத்துக்குப் பாத்திரமாகுமுன்னர், இந்திய மக்கள் பரிசுத்தராகவேண்டும். தனது தேசத்துக்குத் தொண்டுபுரிய விரும்பும் மாணவன் எவனும் முதலில் தன்னைத்தான் பரிசுத்தன் ஆக்கிக்கொள்ளவேண்டும். அப்பு அழுக்கு இல்லாத நன்னடக்கையும் வாய்ந்திருக்கவேண்டும். இந்திய மாணவரைப்போல் எங்கும் கண்டதில்லை என்று ஆங்கிலேயர் உரைப்பாராயின், அஃதே நமது தேசத்துக்குப் பெருமையாகும். சலுகை வேண்டும் என்று விரும்பும் எந்த வகுப்பாரும் தங்கள் தொண்டினால் சலுகைக்குப் பாத்திரமாக வேண்டும். சலுகை வேண்டும் என்று கேட்பதனால் சலுகை கிட்டிவிடாது. தேச ஊழியத்தில் மனப்பூர்வமாகத் தியாகம் செய்வோர் தம்மைத்தாமே உயர்த்திக் கொள்வதோடு, தேசத்தாரையும் உயர்த்துவர். பிறரின் நலத்தைச் சுரண்டும் மிருகசுபாவம் படைத்தவர்களே, கீழ் நோக்கி வீழ்ந்துகொண்டே இருப்பார்கள். ஒருவன் செய்த பாவம் நம்மையும் சேரும். ஆதலின் யாரும் பாவம் செய்யா வண்ணம் நாம் பார்க்கவேண்டும். ஆண்டவனைத் துதித்தலினால் நாம் அவனை நெருங்க முடியும். ஈசுவர துதியில் ஆடம்பரமும் சம்பிரதாயமும் தேவையில்லை. நிர்மலமான மனமே அவசியம்.”

16. இந்தியா ஒரு சிறைச்சாலை

இந்தியாவுக்கு சுயேச்சை கிடைக்கவேண்டும் எனும் சங்கத்தார் காந்திக்கு நல்வரவு கூறியகாலையில், அவர் பேசியதின் சாரம்:—“இந்தியாவில் உள்ள சிட்டகாங் நகரில் மகாஜனங்கள் சொல்லொணுக் கொடுமைகளும் மானக்கேடுகளும் இழைக்கப்பட்டார்கள். தவிர, ஆள் தூக்கி அவசரச்சட்டத்தின்மேல் பந்தோபஸ்தில் உள்ள

வங்கவாலிபரின் சிறைக்கூடத்திலே காவலாளர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கியும் ஈட்டியும் கொண்டு தாக்கவே, இரு வங்க வாலிபர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இருபதின்மர் படுகாயம் அடைந்தனர். இந்த இரண்டையும் பற்றி ஒரு வார்த்தைகூட இங்கிலாந்தின் பத்திரிகைகளில் காணப்படவில்லை. இத்தகைய விஷயங்களைப் பிரசுரிக்காமல் இருப்பதென்றே ஆங்கிலப் பத்திரிகைகள் சதி செய்கின்றனபோலும்! இந்தியாவிலே புரட்சிக்காரரின் செயல்கள்மட்டும் பிரமாதமாகப் பிரசுரிக்கப்படுகின்றன. அச்செயல்களை நான் பலமாய்க் கண்டிக்கிறேன். அவர்களை வசப்படுத்த காங்கிரஸ் மகாசபையாரால் ஆகவில்லை, எனினும் இந்தியாவின் பரப்பைக் கவனிக்குமளவில், புரட்சிக்காரரால் இரண்டொரு கொலைச் செயல்கள் மட்டுமே நடைபெறுவதைக் கவனிக்கவேண்டும். ஹிம்ஸை முறை இந்தியாவில் பிரபலம் ஆகாது. இல்லையானால் சிட்டகாங்கில் நடந்த கொடுமை கண்டும் கேட்டும், பிரமாதமான கலகம் கிளம்பியிருக்கும். பயங்கரச் செயல்கள் நிகழும்காலையில் அன்னிய அரசாங்கம் பித்துக்கொண்டு விடுகின்றது. பயங்கரச்செயல்கள் நிகழாதிருக்கவேண்டின் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிட்டவேண்டும். இந்தியா ஒரு பெரிய சிறைச்சாலையாக இருக்கின்றது. நாங்கள் அனைவரும் கைதிகளே. நாங்களும், எங்களைக் கட்டியாளும் நீங்களும் ஒருநாள் வகை சொல்லநேரும். நீங்கள் எங்களுக்கு சுதந்திரம் தரமுடியாது. நாங்களோ உங்களிடமிருந்து சுதந்திரம் பிடுங்கிக்கொள்ளவேண்டும். உங்கள்மனம் திடுக்கிடும்படி நாங்கள் கஷ்டநஷ்டம் அனுபவித்தாய்விட்டது. அவசியமாயின் இன்னும் அனுபவிக்கத் தயார். சிட்டகாங் சம்பவத்தைக் கவனிக்குமளவில் விரைவில் நான் என் ஊருக்குப் போகவேண்டும் என்று தோன்றுகிறது. எனினும் இங்கே காத்திருக்கவும், உங்களைக் கேட்டுக்கொள்ளவும், நான் தயார். எங்கள் நோக்கை நீங்கள் ஈடேற்றாமல்போயின், மேலே நடக்கவேண்டிய காரியத்திற்கு இந்தியா தயாராக உளது. வலியும்வாழ்வும் இன்றி இந்தியா கிடந்துவிடும் என்று எண்ணாதீர்கள். தனக்கும் பிறருக்கும் அது வாழ்வளிக்கும்.”

17. புருஷோத்தமன்

அமெரிக்காவின் பாதிரிமாரில் சிறந்தவர் ஹோம்ஸ் என்பவர். அவர் மகாத்மாவைக் குறித்து எழுதியிருப்பது இது:— "மகாத்மா காந்தி இன்றைறென்று பன்னீராண்டுகளுக்கு முன் நான் கண்டு கொண்டேன். உடனே அவர் தான் புருஷோத்தமர் என்று உலகறிய உரைத்தேன். அதற்கப்பால் அவருடன் கடிதப் போக்குவரவு செய்து வந்தேன். அதன்மேல் அவரை என் கண்கொண்டு காண வேண்டும் என்று இத்துணை நாளாக் கனவு கொண்டிருந்தேன். அங்ஙனமே அவரைக் கண்டேன், களிப்பும் கொண்டேன், தூயவனும் ஆயினேன். அவர் மனம் எப்போதும் நிம்மதியுடன் இருக்கிறது; விருப்பு வெறுப்பு என்பதை அவரிடம் நான் காணவில்லை. நான் அவருடன் பேசியிருந்த நேரம் என்வாழ்வில் மிகவும் பாக்கியம்வாய்ந்தது. அவ்வேளை, வேறொன்றிலும் என் சிந்தை செல்லவில்லை. தன்னைத்தான் நெஞ்சங்கரியாகத் தானடங்கின், பின்னைத்தான் எய்தாப் பயனில்லை என்பர் பெரியோர். அவ்விதம் அடங்கியவர் மகாத்மா காந்தி. தன்னைத்தான் அடக்கிக்கொள்ளும் குணம் அவரிடம் இருப்பதனால், அவரைக் கண்டதும் பிறரும் அடக்கம் கொள்கின்றனர். மனிதரிலே அவரைப்போன்ற சாந்தமூர்த்தியைக் காண முடியாது. ஒருமுறை காந்தியைக்கண்டு, அவரது புன்னகையும் நம்மீது படுமாயின், கோடிக்கணக்கான உலக மக்கள் இன்று அவர் காலடியில் கிடக்கும் காரணத்தை நாம் நன்கு அறிந்துகொள்ளலாம். லண்டன் பத்திரிகைகளில் சிலவோ அவரைத் தாக்கி எழுதியுள. அது கண்டு அவர் சிறிதும் சினம் கொள்ளவில்லை; சிரிப்பே கொள்கின்றார். மனிதர் ஏன் பொய் புகலவேண்டும் என்றுதான் அவர் வருந்துகிறார். அவர் அன்பின் வடிவம். அவரது போதம் பெற்றுப் புனிதராக மானிடரிலே பலருக்கு இன்னும் பரிபக்குவம் கிட்டவில்லை. விரைவில் அப் பக்குவம் கிட்டின் வாழ்விலே விழுமிய பலன் பெறலாம்."

காண்டர்பரி என்பது இங்கிலாந்தின் உள்ள ஒரு நகரம். அங்குள்ள பிரதம பாதிரியின் பட்டப்பெயர் டீன்.

அவரோ ஆங்கில அரசர்களுக்கு முடிசூட்டும் உரிமை படைத்தவர். அவர் காந்தியை வரவழைத்து உரையாடி நின்றார். அது சம்பந்தமாக அந்த "டீன்" எழுதியிருப்பது. "நான் காந்தியை அழைத்தது என்? அவரைக் கிறிஸ்துவ மதத்திற்கு மாற்ற முடியுமோ? என்று பலரும் என்னைக் கேட்கின்றனர்: ஏசுநாதரைப்போன்ற வாழ்க்கை கொண்டவர் காந்தி ஒருவர்தான். அவரைப்போன்ற உத்தமரை நான் இன்றளவும் கண்டதில்லை. ஏசுநாதரைப்போல் அவர் இருக்கையில், அவரைக் கிறிஸ்துவ மதத்திற்கு இழுக்காவாவது? இது ஆச்சரியம் அல்லவா? சிறுவயதில் எனக்கு ஓர் அரிய எண்ணம் உதித்தது. அதாவது, கீழ்த்தேசங்கள் சென்று, அங்கே துன்பப்படும் மக்களுக்கு கைகொடுக்க வேண்டும் என்பதே. அப்பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை என்றாலும், துன்பப்படுவோரைத் தூக்கிவிடும் ஒருவரது சல்லாபம் கிடைத்ததுபற்றி மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். அப்பெரியார் எனது அறையிலே கையும் புத்தகமுமாய் சாந்தவடிவுடன் நின்ற கோலத்தை நான் என் ஆயுளளவும் மறவேன். அக்கோலம் சதா என் மனக்கண் முன்னே நிற்கின்றது. வட்டமேஜை மகாநாடு முடிந்து, காந்தி தமது ஊர்திரும்பின், போராட்டம் கிளம்பும். அப்போது, பஞ்சாப் படுகொலையைப்போன்ற சம்பவம் மீண்டும் நிகழுமாயின், அது கண்டு பிரிட்டிஷ் மக்கள் வாளாவிரார். இதனை உலகறிய உரைப்பேன். காந்தி நூல் நூற்பதை நான் பார்த்து நின்றேன். யந்திரங்களைக் கண்டு காந்தி வெறுப்புக் கொள்வதாகப் பலரும் பேசுகின்றனர்: அதன் காரணத்தை யாரும்நன்கு உணரவில்லை. நான் பார்த்த யந்திரங்களிலே கைராட்டை மிகவும் நுட்பமானது. கைராட்டையின் நூல்கொண்டு நெய்த ஆடையை அணிந்துகொள்ள நான் ஆசைப்படுகிறேன். இந்தியாவிலே லட்சோப லட்சக் கணக்கான மக்கள் வறுமை வாய்ப்பட்டுக் கிடப்பதற்கு யந்திரங்களே காரணம். ஆதலினால்தான் யந்திரங்களை விடுத்து கைராட்டையைக் கொள்ள காந்தி வேண்டிக் கொள்கிறார்.

முதல் பதிப்பு, ஐயாயிரம் பிரதிகள் : 14-11-31.

Kesari Printing Works, Madras.